செ. கு. எண்: 332 நாள் :18.12.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 18.12.2013

மதுரை மாவட்டம், சக்கிமங்கலம் உள்வட்டம், வண்டியூர் கிராமம் அருகே 8.11.2013 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த சிவகங்கை மாவட்டம், இளையான்குடியைச் சேர்ந்த சரவணன்;

சென்னை, தண்டையார்பேட்டை, பேசின் பிரிட்ஜ் அருகே 9.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பழைய வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த திரு. ரமணய்யா என்பவரின் மகன் அரிகிருஷ்ணன்;

சென்னை, கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகே 10.11.2013 அன்று சாலையை கடக்க முயன்ற தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமலிங்கம் என்பவரின் மகன் உமாபதி;

திருவண்ணாமலை மாவட்டம், சிறுநாத்தூர் கிராமம் அருகே 13.11.2013 அன்று தேனிமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரேசன் என்பவரின் மகன் துரைராஜ்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தனிச்சயம் உட்கடை, அய்யங்கோட்டை கிராமம் அருகே 14.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பன்னப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வேலு என்பவரின் மகன் துரைராஜ்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், வாளாடி பகுதி, மாடக்குடி கிராமம், திருச்சிராப்பள்ளி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 23.11.2013 அன்று காரில் பயணம் செய்த மதுரை மாவட்டம், கூடல் நகரைச் சேர்ந்த திரு. பாலன் என்பவரின் மகன் பிரபு ; கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கல்லுக்கோட்டம் கிராமத்தைச் சேர்ந்த திரு. இருதய அடிமை என்பவரின் மகன் பாபு ஜான்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மேவளூர்குப்பம் ‘அ’ கிராமம், சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை, தண்டலம் கூட் ரோடு அருகே 25.11.2013 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், அவதானப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனிராஜ் என்பவரின் மகன் வெங்கடேஷ்;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9